தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை, 1981 பிப்ரவரி 27.

மாசி 16, ரௌத்திரி 2012—திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

முந்திரிப் பருப்புத் தொழிற்சாலைகள்.

* 87 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் எத்தனை முந்திரிப் பருப்பு தயார் செய்யும் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன ?

(இ) அதற்குரிய காரணங்கள் யாவை ?

(உ) மூடப்பட்டிருப்பதால், வேலையின்றித் தவிக்கும் தொழிலாளர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) 23.

(இ) தேவையான அளவு கச்சாமுந்திரி கிடைக்காமையால்.

(உ) 1,520.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 23 முந்திரிப் பருப்டித் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த ஆலைகளில் வேலை செய்துவந்த பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களுக்கு இப்போது வேலை இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, கச்சா முந்திரியை ஒதுக்கீடு செய்வதில் கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சிறப்பிடம் கொடுத்து, தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : கச்சா முந்திரி ஒதுக்குவதை, மத்திய சர்க்காருக்கு உட்பட்ட கொச்சியில் உள்ள இந்திய முந்திரி நிறுவனம் செய்து வருகிறது. அதிக அளவிற்கு தமிழகத்திற்கு ஒதுக்குமாறு தமிழக அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : தமிழகத்தில் முந்திரிப் பயிரின் விளைச்சலை அதிகப்படுத்துகிற திட்டம் அரசிடம் இருக்கிறதா? கன்னியாகுமரி மாவட்டத்திலும், பிற மாவட்டங்களிலும் முந்திரியைப் பயிரிட ஊக்குவிக்கும் வகையில் சப்சிடியைக் கொடுத்து உதவ அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : முந்திரியை அதிக அளவு உற்பத்தி செய்ய வனத் துறையும், வேளாண்மைத் துறையும் அதிக முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கின்றன.

திரு. ஆ. நல்லசிவன் : சுமார் 75,000 தொழிலாளர்கள் வேலை செய்யும் 150 முந்திரி ஆலைகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்றன. அங்கே ஆண்டில் நான்கைந்து மாதங்களுக்குத்தான் அவர்களுக்கு வேலை இருக்கின்றது. முந்திரிக் கோட்டாவை ஒதுக்குவதில் ஏற்கெனவே கேரளாவிற்குத் தான் முன்னுரிமை அளிக்கப்படுவதாகத் தெரிகிறது. தமிழ் நாட்டில் 75,000 தொழிலாளர்கள் வேலையின்றி தவிப்பதால், தமிழகத்திற்கு உரிய பங்கைப் பெற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தமிழக அரசு, அதிக அளவு தேவை என்பதை மத்திய அரசிடம் வலியுறுத்தி, நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகள்.

* 88 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980, செப்டம்பரில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள சுமார் 850 சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகள், தொடர்ந்து சில நாட்கள் மூடப்பட்டிருந்தன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணங்கள் யாவை?

(உ) அரசுக்கு அதுபற்றி முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(ஊ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?